(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 32.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 மே 17 செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2044/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(i) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கிராமங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இதுவரையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புக் கிராமங்கள் காணப்படின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வீடமைப்புக் கிராமங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2060/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நெடுஞ்சாலைகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2072/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2095/2022

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்திற்கு அமைய இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையின் அலுவலர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் II ஆம் அத்தியாயத்தின் 12.1 இன் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக/மிகைத்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்ட ரீதியான தத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எழுத்திலான சட்டம் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XXV ஆம் அத்தியாயத்தின் 4:1 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 146 ஆம் பிரிவின் VI ஆம் உட்பிரிவுக்கு அமைய 2021.09.30 ஆம் திகதியளவில் இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் அலுவலர்களிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு அலுவலரின் பெயர், விடுவிக்கப்பட்ட திகதி, மேற்படி சந்தர்ப்பத்தில் பதவி மற்றும் கடமை முகவரி என்பன தனித்தனியே யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2113/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மரணமடைகின்ற நபரொருவர் சார்பில் வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) யானை-மனித மோதலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2261/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை வழங்காதிருப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தீர்மானம் காரணமாக அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2457/'2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் வருகை தரக்கூடுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் 2022 ஆம் ஆண்டில் ஈட்டுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2565/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கம்பனிகளினால் இன்றளவில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் காணி உரித்து அரசாங்கத்திற்குரியதாக உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி காணிகளின் உரித்து அரசாங்கத்திடமிருந்து அகற்றப்பட்டு முழுமையாக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கின்ற போது உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(ii) குறிப்பாக, பெருந்தோட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் வீடமைப்பிற்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக அமையுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீர்செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

2569/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் இருக்கும் பழக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பழக்கப்பட்ட யானைகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழக்கப்பட்ட யானைகளின் நலனுக்காக இதுவரை முறையான வேலைத்திட்டமொன்றோ அல்லது சட்ட முறைமையோ தயாரிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

1.

பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவரின் தேர்வு.

[பாராளுமன்ற நிலையியற் கட்டளை 6 இன் பிரகாரம்]

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

2.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரம் (திருத்தம்),— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

4.

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 46/2022

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ வேலு குமார்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ வருண லியனகே

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ குமார வெல்கம

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ ரோஹண பண்டார,— அரசியலமைப்பின் கீழ் சனாதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி நிறைவேற்ற முடியாமற்போனதன் மீதான பாராளுமன்றத்தின் அதிருப்தி,— அரசியலமைப்பின் உறுப்புரை 42 இன் பிரகாரம், சனாதிபதி, அரசியலமைப்பின் கீழும் பொது மக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதைக்குள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பாராளுமன்றத்துக்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதனாலும்;

அத்துடன் அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ 2019 நவம்பர் 17 ஆம் திகதி சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு இற்றைவரை அப்பதவியில் தொடர்ந்திருப்பதாலும்;

அத்துடன் சனாதிபதி அவரின் தெரிவை உடனடுத்து, அவருடைய சகோதரர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களை பிரதம அமைச்சராக நியமித்ததுடன் அரசாங்கத்தை அமைப்பதற்காக அவரை அழைத்தவுடன், அதை அவர் ஏற்றுக்கொண்டதாலும்;

அத்துடன் 2020 பெப்ரவரி மாத இறுதியில் அழைப்பு விடுவதற்கான உரித்தை சனாதிபதி கொண்டிருந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் 2019 டிசம்பர் மாதத்தில் தொடரான வரி நிவாரணங்களை சனாதிபதி தலைமை வகித்த அரசாங்கம் அறிவித்ததாலும்;

அத்துடன் சொல்லப்பட்ட வரி நிவாரணங்களின் விளைவாக எதிர்பார்த்த வருவாயில் 25% வரை அரசு இழக்க வேண்டி ஏற்பட்டதுடன் அதன் தாக்கத்தினால் 2020 ஏப்ரல் மாதமளவில் தரப்படுத்தல்களில் B இலிருந்து B- இற்கும் 2020 நவம்பர் மாதமளவில் CCC இற்கும் வீழ்ச்சியடைவதற்குப் பாரிய பங்களிப்புச் செய்து சர்வதேச நிதிச் சந்தைகளிலிருந்து இனிமேலும் கடன் பெற முடியாத அளவுக்கு நாட்டை முடங்கச்செய்ததாலும்;

அத்துடன் 2021 ஏப்ரல் மாதத்தில் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் சனாதிபதி இரசாயன உரப் பாவனைத் தடைக்குக் கட்டளையிட்டு உடனடியாகச் செயலுாக்கம்பெறும் வகையில் அக்கட்டளையினை அமுல்படுத்திய காரணத்தினால் சொல்லொணாத் துயரங்கள் ஏற்பட்டு பல்வேறு உற்பத்திகளின் விளைச்சல்களில் பேரிழப்பு ஏற்பட்டதாலும்;

அத்துடன் கொவிட்-19 பெருந்தொற்றினைக் கையாளுவதற்கான உரிய செயன்முறை இல்லாதிருந்த அதேவேளை, நிபுணத்துவ விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளைப் புறக்கணித்து நாடு முழுவதும் இராணுவமயமாக்கத்தை விஸ்தரித்து அதிகரிப்பதற்கு சனாதிபதி கொவிட்-19 பெருந்தொற்றை தவறாகப் பயன்படுத்தியமையாலும்;

அத்துடன் விஞ்ஞான ரீதியான மற்றும் மருத்துவ ஆலோசனைகள் செவிமடுக்கப்படாமையால் 20 நாட்களே ஆன சிசு உள்ளடங்கலாக வலிந்து மேற்கொள்ளப்பட்ட தகனம் மூலமாகச் சிறுபான்மையினர் இலக்குவைக்கப்பட்டமை அவ்வாறே போலி மருத்துவப் பரிகாரங்கள் ஊக்குவிக்கப்பட்டமை நிகழ்ந்துள்ளதுடன் 2020 ஒக்டோபர் மாதமளவில் 'இடுகம' கொவிட்-19 சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் 1.659 பில்லியனை மிகைத்த போதிலும் வைத்தியசாலைகளில் பாரிய பற்றாக்குறை ஏற்பட்டு நோயாளிகளுக்குக் கிடைத்த மருத்துவ வசதிகளிலும் பெரும் பற்றாக்குறை நிலவியமையாலும்;

அத்துடன் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றுவதற்கு சனாதிபதி தவறியதுடன் அவசியமான வர்த்தமானி வெளியீடுகள் இன்றி கொவிட்-19 பெருந்தொற்று உச்சமடைந்திருந்தபோது "ஊரடங்கு" மற்றும் "தனிமைப்படுத்தல் ஊரடங்கு" ஆகியவற்றின் சட்டவிரோதப் பிரகடனத்தினை அமுல்படுத்தியமையாலும்;

அத்துடன் சைனோபாம் தடுப்பூசியின் ஒரு வேளைக்கான மருந்தை 2.85 அமெரிக்க டொலருக்குப் பதிலாக 15 அமெரிக்க டொலருக்குக் கொள்வனவுசெய்து அதன்மூலம் பொருளாதாரத் தாக்கத்தை மேலும் மோசமடையச் செய்த அதேவேளை, மரணத்தை ஏற்படுத்தும் வைரசின் விரைவான பரவுதலைத் தடுப்பதற்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்று தடுப்பூசியேற்றுதலுக்கான ஊக்குவித்தலை ஆரம்பிப்பதற்கு அவசரமான மற்றும் காலத்திற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தவறியதாலும்;

அத்துடன் சனாதிபதி அவரின் சகோதரரான கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களின் மோசடி தொடர்பான நீதிமன்ற வழக்குகள் முற்றுப்பெறாதிருக்கையில், அவரை 2021 ஜூலை மாதத்தில் நிதி அமைச்சராக நியமித்தமையாலும்;

அத்துடன் திரு. அஜித் நிவாட் கப்ரால் அவர்களின் பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்வதிலுள்ள முந்தைய தெளிவற்ற அனுபவத்தைப் புறக்கணித்து சனாதிபதி அவரை 2021 செப்டெம்பர் மாதம் அல்லது அண்மித்த காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தமையாலும்;

அத்துடன் திரவப் பெற்றோலிய வாயுச் சிலிண்டரின் ஆக்கஅமைவின் மாற்றத்தினால் பல மரணங்களையும் காயங்களையும் ஏற்படுத்திய ஏறக்குறைய 730 திரவப் பெற்றோலிய வாயுச் சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் அறிக்கைசெய்யப்பட்டிருந்ததாலும்;

அத்துடன் சனாதிபதி நியாயபூர்வ, விஞ்ஞான ரீதியான மற்றும் நிபுணத்துவ ஆலோசனையின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தொடர்ச்சியாகத் தவறியுள்ளதுடன் குறிசொல்பவர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்ற அதேவேளை அரசாங்க நிதியை உபயோகித்து அவரின் விகாரையை நிர்மாணித்து அவருக்கு இராணுவப் பாதுகாப்பை வழங்கியதாலும்;

அத்துடன் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி அல்லது அதற்கண்மையில் சனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் சொல்லப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து அதிகாரங்களைத் துர்ப்பிரயோகஞ்செய்து அவரது தனிப்பட்ட பாதுகாப்புக்கு அவசரகால நிலைமையை சட்டவிரோதமாகப் பிரகடனப்படுத்தி அதன்மூலம் சாத்வீக எதிர்ப்பு, நடமாடுதல், தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், எதேச்சையாகக் கைதுசெய்தல் மற்றும் தடுத்துவைத்தலிலிருந்து சுதந்திரம், ஒருங்குசேர்வதற்கான மற்றும் சட்டமுறையான தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை மீறியமையாலும்;

அத்துடன் 2022 ஏப்ரல் 03 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதி ஒன்றில் பிரசைகள் மீது விதிக்கப்பட்ட சமூக ஊடக தடை காரணமாக செய்தி இற்றைப்படுத்தல்கள் மற்றும் நாளாந்த மின்வெட்டு விபரங்கள் போன்ற முக்கியத்துவம் வாய்ந்தவையும் அத்தியவசியமானவையுமான தகவலுக்கான அணுகல் உள்ளடங்கலாக தகவல் அணுகலுக்கான உரிமையை உள்ளிட்ட அவர்களின் அடிப்படை உரிமைகள் மேலும் பறிக்கப்பட்டதாலும்;

அத்துடன் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்று கோரி சனாதிபதியின் சட்டரீதியான தீர்மானம் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதி உடனடியாக அவசரகால பிரகடனத்தை இல்லாதொழித்ததாலும்;

அத்துடன் 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதி ஒன்றில் சடுதியான எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ரம்புக்கண மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு அவர்களின் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை பிரயோகிக்கும் போது பொலிஸ் அதிகாரிகளால் அவர்கள் மீது துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டு ஒருவர் (01) கொல்லப்பட்டு, மூன்று (03) பேர் மோசமாக காயத்துக்கு உள்ளாக்கப்பட்டு அத்துடள் ஏனைய பல நிராயுத பிரசைகள் படுகாயமடைந்ததாலும்;

அத்துடன் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடைந்ததன் விளைவாக ஏற்பட்ட பாரிய தட்டுப்பாடுகள் காரணமாக அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வரிசைகளில் இருக்கும் போது பல பிரசைகள் மரணத்தை தழுவியதாலும்;

அத்துடன் இரசாயன உரம் மீது உடனடியாக தடை ஒன்றை விதித்ததுடன் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு தாமதித்ததன் மூலம் தான் தவறிழைத்ததாக சனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இந்த இரண்டு 'தவறுகளும்' பொருளாதாரத்தின் மீது பாரதூரமான மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியதாலும்;

அரசியலமைப்பின் கீழ், சனாதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி நிறைவேற்ற முடியாமற்போனமை தொடர்பில் இப்பாராளுமன்றம் அதிருப்தியை வெளிப்படுத்திக்கொள்கிறது.

* 2.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

பிரதம அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

8.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

9.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.